இனிமையான குழந்தைகளே, உங்கள் வாசலுக்கு யார் வந்தாலும், அவர்களுக்கு கொஞ்சமாவது ஞான செல்வத்தைக் கொடுக்க வேண்டும். முதலில் படிவத்தை நிரப்ப வையுங்கள், பிறகு இரண்டு தந்தையரின் அறிமுகத்தைக் கொடுங்கள்.

கேள்வி: மந்திரவாதி பாபாவின் மாயாஜாலம் எத்தகையது?

பதில்: மந்திரவாதி பாபாவின் மாயாஜாலத்தைப் பாருங்கள் - இவ்வளவு உயர்ந்த பாபா சொல்கிறார், நான் உங்கள் சேவைக்கு வந்திருக்கிறேன், நான் உங்களின் குழந்தையாகவும் ஆகி விடுகின்றேன். குழந்தைகளாகிய நீங்கள் என் மீது பலி ஆகிவிடும் போது, நான் 21 பிறவிகளுக்கு உங்கள் மீது பலியாவேன். இவை கூட அதிசயமான விசயங்களாகும். பாபா எவ்வளவு அன்போடு படிப்பை படிப்பிக் கின்றார். உங்கள் அனைத்து மன ஆசைகளையும் பூர்த்தி செய்து விடுகின்றார். உங்களிடமிருந்து எந்த கட்டணம் போன்றவையும் பெற்றுக் கொள்வதில்லை. அவரை ராஜூ-ரமஜ்பாஜ் (பெயர்) என்று சொல்லப்படுகிறது.

பாடல்: யார் தலைவனோடு இருக்கின்றார்களோ, அவர்களுக்கு எப்போதும் ஞானத்தின் மழை....................

ஓம் சாந்தி. தலைவன் மற்றும் மழை. யார் தலைவனோடு இருக்கின்றார்களோ, அவர்களுக்காக (ஞானத்தின்) மழை பொழிகிறது. இதை ஞானத்தின் மழை என்று சொல்லப்படுகிறது. ஞான மழையை யார் பொழிவிக்கிறார்? ஞானக்கடல். இந்தப்பாடலை யார் பாடினாரோ, உருவாக்கினாரோ, அவருக்கு எதுவும் தெரியாது. நீங்கள் அதிர்ஷ்டம் நிறைந்த ஞான நட்சத்திரங்கள் ஆவீர்கள். நீங்கள் ஞானக்கடலின் குழந்தை ஆகியுள்ளீர்கள், ஆகையால் உங்களை ஞான நட்சத்திரம் என்று சொல்லப் படுகிறது. பாபாவிடமிருந்து ஞானம் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஞானத்தில் எப்போதும் குறிக்கோள் இருக்கும். ஏதேனும் பிராப்தி அடைவதற்கான வழி கிடைக்கிறது. எல்லைக்கப்பாற் பட்ட தந்தையிடமிருந்து எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தி அடைய வேண்டும் என்று இப்போது குழந்தைகளாகிய நீங்கள் தெரிந்திருக்கிறீர்கள். அவர் பரலெளகீகத் தந்தை ஆவார். உங்களிடம் எப்போதாவது ஏதேனும் புதிய மாணவர் வருகிறார் என்றால், படிவத்தை நிரப்ப பயப்படுகிறார். ஆகையினால் அவருக்குப் புரியவைக்க வேண்டும், ஏனெனில் உங்களிடம் வந்திருக்கிறார் என்றால் பாவம் அவருக்கு ஏதேனும் கிடைக்க வேண்டும். அவர்கள் ஏழையாக (ஞான செல்வம் இல்லாத வர்களாக) இருக்கின்றனர். உங்களிடம் அதாரிட்டி (ஞானத்தின் மீது முழு உரிமை மற்றும் அதிகாரம்) இருக்கிறது. வரிசைக்கிரமமாக சிலர் முழு தேர்ச்சி அடைகிறார்கள், சிலர் குறைவான தேர்ச்சி அடைகிறார்கள். நம்மிடம் நிறைய ஞான இரத்தினங்கள் இருக்கிறது என்பது கூட போதை ஆகும். ஞானக்கடல் ஒன்றும் மாளிகையில் இருப்பதில்லை, சிறு குடிசையில் இருக்கின்றார். குடிசையில் இருக்கத்தான் விரும்புகின்றார். யாராவது நாங்கள் படிவம் நிரப்ப மாட்டோம் என்று சொன்னால் சொல்லுங்கள் - நல்லது உங்கள் பெயரையாவது எழுதுங்கள், நாங்கள் எங்கள் மூத்த சகோதரியிடம் 'இன்னார் வந்திருக்கிறார்' என்று காட்டுவோம். கொஞ்சம் புரிந்து கொள்வதற்காகத் தான் வந்திருக்கின்றீர்கள். நல்லது உங்கள் பெயரை எழுதுங்கள். உங்கள் லெளகீகத் தந்தையின் பெயரையும் எழுத வேண்டும் என்று சொல்லுங்கள். பிறகு

உங்களுக்கு இரண்டு தந்தைகள் என்று புரிய வையுங்கள். ஒன்று லௌகீகத் தந்தை, மற்றொருவர் பரலௌகீக பரமபிதா பரமாத்மா ஆவார். பிதா என்று சொல்கிறீர்கள் என்றால் அவருடைய பெயரையும் எழுதுங்கள். பரமபிதா எனும்போது அவர் அனைவருடைய தந்தை ஆவார். ஒவ்வொருவருக்கும் லௌகீக மற்றும் பரலௌகீகத் தந்தை இருக்கிறார்கள். பக்தி மார்க்கத்தில் இரண்டு தந்தைகள் இருக்கின்றனர். சத்யுகம்-திரேதா யுகத்தில் லௌகீகத் தந்தை இருப்பார், அங்கே பரலௌகீகத் தந்தையின் பெயரையே சொல்வ தில்லை. இந்த விசயங்களை நீங்கள் புரிந்து, பிறகு புரிய வைக்க வேண்டும். எவ்வளவு எளிமை யான விசயங்கள் புரிய வைக்கப்படுகின்றன. யாரை இறைதந்தை என்று சொல்கிறோமோ, அவர் பரலோகத்தில் வசிக்கக்கூடியவர் ஆவார். சத்யுகம்-திரேதாயுகத்தில் பரலௌகீகத் தந்தையை முற்றிலுமாக நினைவு செய்வதில்லை என்பது புத்தியில் வருகிறது. இங்கே அனைவரும் நினைவு செய்கின்றனர். ஆகையால் புரிய வைக்க வேண்டும், லௌகீகத் தந்தையின் பெயரை எழுதினீர்கள், இப்போது பரலௌகீகத் தந்தையின் பெயரை எழுதுங்கள். அனைத்து ஜீவாத் மாக்களும் அந்த பரலௌகீக பரமபிதாவை நினைவு செய்கின்றனர். அவர் ஒரே ஒருவர் தான் ஆவார். ஆத்மா எப்படி நிராகாரமானதோ, அதுபோல அவரும் நிராகாரமானவர் ஆவார். அவருக்கு எந்த சூட்சும அல்லது ஸ்தூல சரீரமும் கிடையாது. அவரை சர்வ வியாபி (எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருப்பவர்) என்று சொல்ல முடியாது. லௌகீகத் தந்தையை ஒருபோதும் சர்வவியாபி என்று சொல்ல முடியாது. அவரை சர்வவியாபி என்று சொன்னால் ஆஸ்தி கிடைக்குமா என்ன? பிறகு பரலௌகீகத் தந்தையை மட்டும் சர்வவியாபி என்று ஏன் அழைக் கிறீர்கள்? பரலௌகீகத் தந்தையை அனைவரும் இவ்வளவு நினைவு செய்கின்றனர் எனும் போது கண்டிப்பாக அவரிடமிருந்தும் ஆஸ்தி கிடைக்க வேண்டும். படைப்பவரிடமிருந்து படைப்புக்கு ஆஸ்தி கிடைக்க வேண்டுமல்லவா! இப்படிப்பட்ட புதுப்புது விசயங்களை புரிய வைப்பதன் மூலம் உடனடியாகப் புரிந்து கொள்வார்கள். நீங்கள் அனுபவத்தோடு சொல்கிறீர்கள். அந்த தந்தையிடமிருந்து ஆஸ்தி அடைவதற்கான யுக்தி சொல்லப்படுகிறது. அந்த தந்தை தான் சொர்க்கத்தைப் படைப்பவர் ஆவார். பாரதம் ஜீவன் முக்தி நிலையில் இருந்தது, இப்போது ஜீவன் பந்தனமாக ஆகிவிட்டது என்று உங்களுக்குத் தெரியும். துக்கத்திலிருந்து விடுவிப்பவர் பாபா தான் ஆவார்.

திரிமூர்த்தியுடன் கூடிய லக்ஷ்மி நாராயணனின் சித்திரம் மிக நன்றாக இருக்கிறது. இது ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். இதை வைத்துப் புரிய வையுங்கள் - இந்த இலக்ஷ்மி நாராயணர் தான் பாரதத்தின் ஆதி சனாதன தேவி தேவதைகளாக இருந்தனர், சத்யுகத்தின் எஜமானராக இருந்தனர். சொர்க்கத்தின் ஆஸ்தியை கண்டிப்பாக பரலௌகீகத் தந்தை சொர்க்கத்தைப் படைப்பவர் தான் கொடுக்க முடியும். யாரேனும் படிவத்தை நிரப்பாவிட்டாலும், இந்த விசயத்தை எழுத வைப்பது மிக எளிதாகும். இரண்டு தந்தைகள் இருக்கின்றனர், இருவரிடமிருந்தும் ஆஸ்தி கிடைக்கிறது. இலக்ஷ்மி நாராயணன் மற்றும் அவருடைய குழந்தைகள் ஆகியோரைப் பற்றிய வாழ்க்கைக் கதைகளோ கிடையாது. கிருஷ்ணருக்காக அவரை சிறிய கூடையில் கொண்டு சென்றனர், இப்படி இப்படி எல்லாம் நடந்தது என்று சொல்கிறார்கள். நல்லது இந்த இலக்ஷ்மி நாராயணருக்கு இராஜ்ஜியம் எங்கிருந்து கிடைத்தது? முற்றிலுமாக ஆதி சனாதன தேவி தேவதைகளின் இராஜ்ஜியம் இருந்தது, இதில் முதல் நம்பர்

இலக்ஷ்மி நாராயணர் ஆவர். அவர்களுக்கு இந்த சொர்க்கத்தின் ஆஸ்தியை யார் கொடுத்தது? இந்த பிரஜாபிதா பிரம்மா கூட அமர்ந்திருக்கிறார். இந்த ஆஸ்தி இலக்ஷ்மி நாராயணர் முன்னால் இருக்கின்றனர். பிறகு (கல்ப) மரத்தைப் பற்றி சொல்லுங்கள். இங்கே இராஜயோகத்தின் தபஸ்யா செய்து கொண்டிருக்கின்றனர். இதிலிருந்து இப்படி இலக்ஷ்மி நாராயணர் ஆகின்றனர். இதைப் புரிய வைப்பது எவ்வளவு எளிதாகும். இலக்ஷ்மி நாராயணரின் பக்தர்களுக்குப் புரிய வைப்பது மிக எளிதாகும். (சென்டருக்கு) உள்ளே யாரும் வருகிறார்கள் என்றால் ஏதேனும் கொஞ்சமாவது ஆன்மீகக்கல்வி புகட்ட வேண்டும். உங்கள் மூலமாக இந்த வேசிகள், காட்டுவாசிகள் ஆகியோர் கூட சீர்படுத்தப்பட வேண்டும். ஆனால் உங்களில் இப்போது அந்தளவு சக்தி இல்லை. நீங்கள் உங்கள் கணவருக்குக் கூட ஞானத்தின் பூம்-பூம் (குளவி போல) செய்து கொண்டே இருங்கள் என்று பாபா புரிய வைத்திருக்கிறார். மனைவி தன்னுடைய கணவனிடம் கூட கேட்க முடியும் - நீங்கள் உங்கள் லௌகீகத் தந்தையின் பெயர் சொல்லுங்கள், நல்லது பரலௌகீகத் தந்தையின் பெயர் சொல்லுங்கள்? அவரைத் தான் நீங்கள் பிறவி பிறவிகளாக மணிக்கணக்காக நினைவு செய்தீர்கள். அவரிடமிருந்து கொஞ்சம் அதிகமாகக் கிடைக்கிறது. இலக்ஷ்மி நாராயணனை நினைவு செய்வதன் மூலம் ஒன்றும் கிடைப்பதில்லை.

பாபா வந்து உங்களுக்கு எவ்வளவு சேவை செய்கிறார். கேட்காமலேயே உங்களுக்குப் படிப்பிக்கிறார். சொல்கிறார்-வாருங்கள் உங்களை சொர்க்கத்திறகு அழைத்துச் செல்வேன். அனைத்து மன ஆசைகளையும் பூர்த்தி செய்கிறார். நரன்-நாராயணனின் சித்திரம் கூட இருக்கிற தல்லவா! இலக்ஷ்மிக்கு பூஜை நடக்கிறது. இலக்ஷ்மியிடமிருந்து செல்வம் கிடைக்கும் என்று புரிந்து கொள்கிறார்கள். இவையனைத்தும் பக்தி மார்க்கத்து விசயங்களாகும். இலக்ஷ்மி (பெண்) எங்கிருந்து செல்வத்தைக் கொண்டு வருவாள்? அவளுக்கு கண்டிப்பாக கணவனிடமிருந்து தான் கிடைக்கிறது. பூஜை செய்யக்கூடியவர்களுக்கு இது எதுவுமே தெரிவதில்லை. குழந்தைகளாகிய நீங்கள் புரிய வைக்க வேண்டும். நீங்களும் இப்போது தான் புரிந்து கொள்கிறீர்கள் - முன்பு நாம் என்ன செய்தோம்? ஒன்றும் புரியாமல் இருந்தோம். இப்போது நல்ல விதத்தில் தெரிந்து கொண்டோம். கிருஷ்ண ஜென்மாஷ்டமி என்றால் காலையில் அவருக்கு பால் ஊட்டுகிறார்கள், ஊஞ்சலில் ஆட்டுகிறார்கள் மற்றும் இரவில் பூரி-பாயாசம் போன்றவற்றை ஊட்டுகிறார்கள். அதற்குள் (காலையிலிருந்து இரவுக்குள்) பூரி-பாயாசம் சாப்பிடுமளவுக்கு வளர்ந்து பெரிதாகி விடுகிறாரா என்ன? இவை கூட புரிந்து கொள்ள வேண்டிய விசயங்கள் அல்லவா! இந்த இராதே கிருஷ்ணர் தான் பிறகு இலக்ஷ்மி நாராயணர் ஆகிறார் என்று உங்களுக்குத் தெரியும். சிவபாபா அவர்களுக்கு இந்தப் பதவியைக் கொடுக்கிறார். சிவனுக்கு பூரி-பாயாசம் போன்றவற்றை ஊட்டுவதில்லை. அவர் மீது பால் மட்டும் ஊற்றுகின்றனர். சிவபாபாவோ நிராகாரமாக இருக்கிறார், அவருக்கு எந்த பெயர்-ரூபமும் கிடையாது, அவர் மீது பால் போன்றவற்றை ஊற்றுவதன் அர்த்தம் என்ன? அவருக்கு எதையும் ஊட்டுவதில்லை. நிராகாரமானவர் அல்லவா! ஸ்ரீ கிருஷ்ணருக்கு ரொட்டி போன்றவை சாப்பிடுவதற்கு வாய் இருக்கிறது. சிவன் மீது எதையும் போடுவதில்லை, சங்கரர் மீது போடுகிறார்கள், சிவன் மீது அல்ல. பிறகும் கூட சங்கரருக்கும் ஆகார ரூபம் அல்லவா! இருவரும் (சிவன் மற்றும் சங்கரர்) ஒன்றாக முடியாது. இப்போது பாபா எவ்வளவு ஞானம் கொடுக்கிறார். எவ்வளவு குப்தமான

(மறைமுகமான) விசயங்களாகும்.

கோபிகைகளாகிய நீங்கள் சிவபாபாவினுடையவர்கள் ஆவீர்கள். சிவனை பாலகன் என்றும் சொல்கிறார்கள். சிவபாபா இதையும் கேட்கிறார் - நீங்கள் சிவனை ஏன் பாலகன் ஆக்கினீர்கள்? ஆஸ்தி பாலகனுக்கு கொடுக்கப்படுகிறது. முதலில் நீங்கள் பலி ஆகும்போது தான் சிவபாபா பலி ஆவார். இது கூட இருக்கிறது - பாபா குழந்தைகள் மீது பலி ஆகிறார், ஆனால் சொல்கிறார், முதலில் நீங்கள் பலி ஆகும்போது தான் நான் பலி ஆவேன். பலி ஆவது என்றால் அவரை தன்னுடைய குழந்தை ஆக்குவது, அவரை பாலனை செய்வது ஆகும். இவை எவ்வளவு அதிசயமான விசயங்களாகும். மாதர்கள் அல்லவா! ஆண்கள் கூட பாலகன் சிவனை தன்னுடைய வாரிசு ஆக்குகிறார்கள். சிவபாபாவை மந்திரவாதி என்று சொல்கிறார்கள் அல்லவா! இலக்ஷ்மி நாராயணர் மந்திரவாதி கிடையாது. இவை மிக குப்தமான விசயங்களாகும். ஒரு சிலர் தான் இவற்றைப் புரிந்து கொள்கிறார்கள். குழந்தைகளாகிய நீங்கள் அனுபவிகளாக இருக்கிறீர்கள். பாபா சாட்சாத்காரம் (பிரம்மா பாபா) பார்த்தார், ஆனால் மம்மா எந்த சாட்சாத்காரமும் பார்க்கவில்லை. ஆனால் கூட மம்மா அனைவரையும் விட தீவிரமாகச் சென்றார். அனைவருக்குமோ சாட்சாத் காரம் கிடைக்காது. இப்படி நிறைய பேருக்கு சாட்சாத்காரம் கிடைத்தது, அவர்கள் இன்று இல்லை. சாட்சாத்காரத்தோடு எந்த சம்பந்தமும் கிடையாது. இது தாரணை செய்ய வேண்டிய மற்றும் செய்விக்க வேண்டிய இனிமையான விசயங்களாகும். மந்திரவாதி ராஜூ ரமஜ்பாஜ் (பெயர்) கூட இருக்கிறார் அல்லவா! மந்திரவாதிகள் மிகத் தீவரமானவர்களாக இருக்கின்றனர். ஆரஞ்சுப் பழத்தைக் காட்டுகின்றனர், தலையை வெட்டி பிறகு சேர்த்து விடுகின்றனர். முன்பு நிறைய மாயாஜாலம் காட்டிக் கொண்டிருந்தனர்.

இப்போது குழந்தைகள் தெரிந்து கொண்டனர், பாபாவிற்குத் தான் மகிமை பாடப்படுகிறது - உங்களின் லீலையோ மிக அபாரமானது, உங்களின் வழியே தனிப்பட்டது. பாபா எவ்வளவு ஸ்ரீமத் கொடுக்கிறார். ஸ்ரீமத் மூலமாக உங்களை சிரேஷ்ட தேவதை ஆக்குகிறார். ஸ்ரீ ஸ்ரீ என்று நிராகார சிவபாபாவுக்குச் சொல்லப்படுகிறது. இலக்ஷ்மி நாராயணனை இப்படி சிரேஷ்டமானவர்களாக யார் ஆக்கியது? அவர் கண்டிப்பாக அவர்களை விடவும் சிரேஷ்டத்திலும் சிரேஷ்டமானவராக இருக்க வேண்டும். மனிதனை எப்படி தேவதை ஆக்குவது என்ற இந்தக் கல்வியை நாம் பாபாவிடமிருந்து கற்கிறோம். இப்போது சீதைகளாகிய நீங்கள் அனைவரும் இராவணனுடைய ஜெயிலில், சோக வனத்தில் துக்கமடைந்து கொண்டிருக்கிறீர்கள். இராம இராஜ்ஜியத்தில் ஒருபோதும் துக்கம் ஏற்படுவதே இல்லை. ஆக யாரிடமிருந்து ஆஸ்தி கிடைக்கிறதோ அவரை நினைவு செய்ய வேண்டுமல்லவா! நாம் ஆத்மாக்கள் என்பதையும் ஏற்றுக் கொள்கிறார்கள். உங்கள் லௌகீகத் தந்தையின் பெயர் என்ன? பரலௌகீகத் தந்தையின் பெயர் என்ன? என்று கேளுங்கள். தந்தையை சர்வவியாபி என்று சொல்ல மாட்டார்கள். தந்தை என்றாலே ஆஸ்தி. எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து எல்லைக்கப்பாற்பட்ட ஆஸ்தி கிடைக்கிறது. இப்போது அது, இராவணனால் திருடப்பட்டு விட்டது. ஆகையினால் தான் சொல்லப்படுகிறது, மாயையை வென்றவர்கள் உலகை வென்றவர்கள் ஆவர். மாயை மீது வெற்றி அடைய வேண்டும். மனம் புயலெனச் சுற்றும் குதிரை ஆகும். உங்களை அடித்து வீழ்த்தி விட முயற்சி செய்யும். பாபா

இப்போது உங்கள் புத்தியின் பூட்டைத் திறந்து விட்டார். நீங்கள் எது சரி மற்றும் எது தவறு என்று புரிந்து கொள்ள முடியும். இப்போது இந்த உலகம் மாறிக்கொண்டிருக்கிறது என்று நீங்கள் புரிய வைக்க முடியும். மஹாபாரத யுத்தம் கண்டிப்பாக நடைபெறும், அதில் அனைத்தும் அழிந்து போய் விடும். யாதவர் கள் ஆயுதங்களால் தன்னுடைய யாதவ குலத்தையே அழித்துக் கொள்கிறார்கள். பாண்டவ குலத்தின் வெற்றி ஏற்பட வேண்டும். ஆனால் 5 பாண்டவர்கள் தப்பிக்கிறார்கள், அவர்களும் மலை களுக்குச் சென்று மறைந்து விட்டதாகக் காட்டப்பட்டிருக்கிறது. மற்றவர்கள் என்ன ஆனார்கள்? ஒன்றும் இல்லை. இராஜயோகம் கற்றுக் கொடுக்கப்பட்டிருந்தால், சிலர் காப்பாற்றப் பட்டிருப்பார் கள். பிரளயம் ஒன்றும் ஏற்படுவதில்லை. இந்த அனைத்து விசயங்களையும், நீங்கள் இப்போது தான் தெரிந்து கொள்கிறீர்கள். கிருஷ்ணர் கடலில் ஆலிலை மீது வந்ததாகக் காட்டுகிறர்கள். ஸ்ரீ கிருஷ்ணர் கர்ப்ப மாளிகையில் வருகிறார். கர்ப்ப ஜெயிலில் துக்கம் ஏற்படுகிறது. கடலோ கர்ப்ப மாளிகையாகும். அதில் மிக ஓய்வாக அமர்ந்திருக்கிறார். பிறவி பிறவிகளாக இந்த பகவத் கீதா ஞானம் போன்றவற்றை கேட்டுக் கொண்டே வந்தீர்கள், பக்தி மார்க்கத்தில் சோர்வடைந்து கொண்டே வந்தீர்கள். இப்போது பாபா உங்களை ஒரு வினாடியில் சொர்க்கத்தின் எஜமானர் ஆக்குகிறார். இதை விதி என்று சொல்வார்கள், ஆயினும் எதனுடைய விதி? நாடகத்தின் விதி என்று சொல்வார்கள். உருவாக்கப்பட்ட நாடகம் அல்லவா! மனிதர்கள் விதி என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள், எதையும் புரிந்து கொள்வதில்லை. ஆகையால் யாரேனும் புதிதாக வந்தால் இரண்டு தந்தையர் இருக்கின்றனர் என்று சொல்லுங்கள். பரலௌகீகத் தந்தை சொர்க்கத்தைப் படைப்பவர் ஆவார். அவரோ சொர்க்கத்தின் ஆஸ்தியைக் கொடுத்திருந்தார். இன்றிலிருந்து 5000 வருடங்கள் முன்பு சொர்க்கம் இருந்தது. இப்போது நரகமாக உள்ளது, மீண்டும் நீங்கள் ஆஸ்தி பெற முடியும். நாமும் எல்லைக்கப்பாற்பட்ட தந்தையிடமிருந்து ஆஸ்தி பெற்றுக் கொண்டிருக்கிறோம். எப்படி இப்ராஹிம், புத்தர் ஆகியோருக்குத் தத்தம் ஜென்ம பூமி உள்ளதோ அப்படித் தான் இந்த பாரதம் பகவானின் ஜென்ம பூமி ஆகும். பாபா வந்திருக்கிறார், ஆஸ்தி கொடுத்துக் கொண்டிருக்கிறார் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். குழந்தைகளாகிய நீங்கள் இரக்கமனதுடையவராக வேண்டும். இதை யாருக்கும் புரிய வைப்பது மிக எளிதாகும். பரலௌகீகத் தந்தையின் அறிமுகம் தர வேண்டும். பரலௌகீகத் தந்தை ஒருமுறை தான் வருகிறார். அவர் நினைவின் மூலமாக நாம் சொர்க்கத்தின் ஆஸ்தி அடைந்து கொண்டிருக் கிறோம். இது மிக எளிதாகும். இப்படிப்பட்ட விசயங்களை நல்ல விதத்தில் தாரணை செய்யுங்கள் மற்றும் புரிய வையுங்கள், தானம் செய்யுங்கள். பரலௌகீகத் தந்தை சொர்க்கத்தின் இராஜ்யத்தைக் கொடுக்கிறார். இலக்ஷ்மி நாராயணனுக்குக் கொடுத்திருக்கிறார் அல்லவா! இந்த சூரிய வம்சத்தைச் சேர்ந்த இலக்ஷ்மி நாராயணனின் தந்தை யார்? நான் உங்களுக்குச் சொல்கிறேன், சொர்க்கத்தைப் படைக்கக்கூடிய தந்தை இப்போது உங்களுக்கு சொர்க்கத்தின் இராஜ்ஜியத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார். மற்றபடி என்ன ஆசீர்வாதம் செய்வார்? நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட அதிர்ஷ்ட நட்சத்திரங்களுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின், வரிசைக்கிரமமான முயற்சியின் ஆதாரத்தில் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கங்கள். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. சரி மற்றும் தவறைப் புரிந்து புத்தி பலத்தின் மூலம் மனம் என்ற புயலெனச் சுற்றும் குதிரையை வசப்படுத்தி, மாயாஜீத் மற்றும் ஜகத்ஜீத் ஆக வேண்டும். தோல்வி அடையக் கூடாது.

2. சிவனை பாலகனாக்கி, அவருக்கு பாலனை செய்ய வேண்டும், அதாவது முதலில் அவரைத் தன்னுடைய வாரிசாக்க வேண்டும். அவர் மீது முழு பலி ஆக வேண்டும்.

வரதானம்: ஊக்கம்-உற்சாகம் மூலம் தடைகளை களைந்து தந்தைக்கு நிகரான அருகே உள்ள இரத்தினம் ஆகுக

குழந்தைகள் மனதில் நான் பாப்சமான் சமீப ரத்தினமான நல்ல குழந்தை ஆவேன் என்ற இந்த எண்ணமே ஊக்கம் உற்சாகத்தில் பறப்பதற்கான ஆதாரமாகும். இந்த உற்சாகமானது வர இருக்கின்ற பல்வேறு விதமான தடைகளை களைந்து முழுமை பெறுவதில் உதவி செய்யும். இந்த ஊக்கம்-உற்சாகமெனும் சுத்தமான திடசங்கல்பம் வெற்றி பெறுவதில் பிரத்யேகமான சக்தி வாய்ந்த ஆயுதமாகின்றது. எனவே உள்ளத்தில் என்றென்றும் ஊக்கம் - உற்சாகமெனும் பறக்கும் கலைக்கான சாதனத்தை என்றென்றும் தன்னுடன் வைத்துக் கொள்ளுங்கள்.

சுலோகன்: எப்படி தபஸ்வி என்பவர் எப்போதும் ஆசனத்தில் அமர்ந்துள்ளாரோ அவ்வாறே நீங்களும் ஏக்ரஸ் மனோநிலை எனும் ஆசனத்தில் அமர்ந்திருங்கள்.

.